# ஒரு அறிமுகம்

*நாம் ஒன்றுகூடிப் படிக்கையில், நசரேயனாகிய இயேசு தேவனுடைய குமாரன் என்றும் குமாரனாகிய தேவன் என்றும் நாம் காண்போம். இது நிச்சயிக்கப்பட்ட ஒரு முடிவு போலக் காணப்படலாம், ஆனாலும் இந்தப் பூமியில் உள்ள பல கோடிக் கணக்கான மக்களில் திரளானவர்கள், இயேசு தெய்வீகமானவர் என்ற கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளாதிருப்பது திகைப்படைய வைக்கிறது. மதரீதியான பின்வரும் புள்ளியியல் கணக்கீட்டைக்[1] கவனியுங்கள்:*

| | | |
|---|---|---|
| *கிறிஸ்துவில் விசுவாசமுள்ள மதங்கள்* | *33.5%* | *187 கோடி* |
| *கிறிஸ்துவில் விசுவாசமற்ற மதங்கள்* | *45.7%* | *255 கோடி* |
| *நாத்திகம் மற்றும் மதமற்ற நிலை* | *20.8%* | *116 கோடி* |
| *மொத்த மக்கள் தொகை* | | *558 கோடி* |

*இந்தப் புள்ளியியல் விபரமானது இயேசுவின் தெய்வீகத்தைக் கூர்மையான ஒருமுகப் படுத்துதலுக்குக் கொண்டு வருகின்றது. இவை கருத்துள்ள சில வினாக்களையும் எழுப்புகின்றன: கோடிக் கணக்கான மக்கள் இயேசுவின் வரலாற்றை ஏன் அறிவதில்லை? அவர்கள் அவரைப் பற்றி ஏன் கேள்விப் படுவதில்லை? இந்த வினாக்களுக்கான முக்கிய விடைகள் யாவும் உலகளாவிய சுவிசேஷத்துவ மற்றும் ஊழியப் பணிகளில் உள்ள குறைபாட்டிலேயே அமைந்துள்ளன.*

*இந்தப் பாடத்தில் நாம் கடும் முயற்சி செய்ய வேண்டிய அறைகூவலை அடுத்துவரும் இருகேள்விகள் நமக்குத் தருகின்றன: (1) இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்ற பலர் அவரை ஏன் விசுவாசிப்பதில்லை? (2) அவரை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்ளுகின்ற பலர் அவரை ஏன் குமாரனாகிய தேவன் என்று ஏற்றுக் கொள்ளுவதில்லை?*

*இந்த வினாக்களுக்கான விடைகள் நபருக்கு நபர் மாறுபடும். சிலர் மேம்போக்கானவர்களாய் இருப்பார்கள், ஆனால் மற்றவர்களோ அதற்கு அப்பால் சென்று, குழப்பத்தினால் கொண்டுவரப்பட்ட பெரும் மனவேதனையை வெளிப்படுத்துவார்கள். இயேசுவைப் பற்றிய இந்தக் குழப்பமானது தவறான அல்லது காலத்திற்கு ஒவ்வாத போதனைச் செயல்*

முறையில் இருந்து விளைந்ததாக இருக்கலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஜிம் ஜோன்ஸ்[2]ஸின் மார்க்கக் குழுவின் பரிதாபமான முடிவுகள் போன்ற சில நிகழ்வுகள் கிறிஸ்துவின் சத்தியத்தைப் பற்றி வேறு வகையில் கேள்விப்பட்டிருந்தால் இயேசுவைப் பற்றித் தெளிவான, பகுத்தறிவுக் கேற்ற மற்றும் இயேசுவின் போதனைகளில் உள்ள கருத்துக்கள் பற்றிச் சரியான ஒரு முன்னிறுத்தல் பெற்றிருக்கக் கூடிய பல மக்களிடத்தில் தேவபக்தியற்ற தன்மையை இயல்பாகவே எழுப்பி விடுவதாயிருக்கின்றன.

பலர் இயேசுவில் விசுவாசம் கொள்ளவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ போகாமற் செய்கின்ற இன்னொரு காரணம் நாம் அவருடைய தனித்தன்மையை விளங்கப் பண்ணுவதில் பெற்றிருக்கும் சிரமமாய் இருக்கலாம். நாம் இயேசுவில் விசுவாசம் உள்ளவர்களாய் இருக்கலாம். அவரை மற்றவர்கள் நம்பச் செய்யும் நமது முயற்சிகளில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கலாம். இருப்பினும், இயேசுவைப் பற்றிய நமது கருத்தானது தெளிவற்றதாகவோ அல்லது ஆழமற்றதாகவோ இருக்கலாம். அவரைப் பற்றிய கடினமான கேள்விகளில் நாம் இடர்ப்பாடு அடையலாம். இயேசுவில் உள்ள நமது விசுவாசமானது விசேஷமாக, நேரடியாக அடையப் பெறாததாக, இன்னொருவர் மூலம் பெற்றதாக இருந்தால், அவநம்பிக்கையின் துளைக்கும் கேள்விகளுக்கு பதில் தரப் போதிய அளவு ஆழமானதாய் இராமல் இருக்கலாம். இது நாம் நமது விசுவாசத்தை மறுத்து விடுவோம் என்று கூறுவதற்கல்ல. நாம் நமது விசுவாசத்திற்குப் போதிய ஆதாரமூலங்களோ அல்லது பக்குவமோ இல்லாமல் இருப்பதால் இயேசுவைப் பற்றிய பதில்களைத் தேடிக் கொண்டிருப்பவரின் வாழ்வில் உள்ள வெற்றிடத்தை நம்மால் நிறைக்க முடியாமல் போகின்றது.

இதைக் கவனியுங்கள்: நீங்கள் உங்கள் நண்பரிடத்தில் அடுத்துவரும் ஞாயிறு அன்று உங்களுடன் ஆராதனையில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்வதற்கான தைரியத்தை வேண்டிப் பெற்றுள்ளீர்கள். ஒருவேளை உங்கள் நண்பர், “சமீபத்தில்தான் நான் தேவனிடத்தில் திரும்பி அவரை ஆராதித்தல் பற்றி நிறையச் சிந்தித்துள்ளேன். இருப்பினும், கிறிஸ்தவர்களாகிய நீங்கள் மூன்று தேவர்களைப் பெற்றிருக்கின்றீர்கள். நான் மத விஷயங்களில் ஒரு தெய்வக் கொள்கையுடன் இருக்கின்றேன். ஒரு தெய்வத்தையே நான் நம்புகின்றேன். மூன்று தேவர்களில் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது” என்று கூறுகிறார் என வைத்துக் கொள்வோம். உங்கள் பதில்செயல் என்னவா யிருக்கும்? நீங்கள் எப்படிப் பதில் அளிப்பீர்கள்? நீங்கள் கூறுவது எதுவோ அதை நீங்கள் எப்படி சரி பார்ப்பீர்கள்?

இது உங்களுக்கு ஒரு பிரச்சனையை முன் வைக்குமென்றால், நீங்கள் தனியாக இருப்பதில்லை. உண்மையில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் இருந்த சபையானது தேவனாகிய பிதாவையும் மற்றும் தேவனாகிய குமாரனையும் பற்றிய, ஒரு தெய்வக் கொள்கையில் எப்படி கிறிஸ்தவம் நிலைத்து நின்றது என்பதை யூதர்களுக்கும், புறதெய்வ விக்கிரகாராதனைக்காரர்களுக்கும் விளக்கப்படுத்துவதில் இடர்ப்பாடு

அடைந்திருந்தது.

தேவனைப் பற்றிய நமது கருத்தானது நமது மதத்தைப் பற்றி நிறைவாகத் தீர்மானிப்பதால், தேவனாகிய குமாரன் என்ற நமது இந்தப் பரிசீலனைக்குச் சேர்ந்து கொள்ளும்படி நாங்கள் உங்களை நேர்மையாய் அழைக்கின்றோம். பிதாவாகிய தேவன் மற்றும் குமாரனாகிய தேவன் ஆகிய கருத்துக்கள் உள்ளடங்கிய தனது ஒரு தெய்வக் கண்ணோட்டத்தைக் கிறிஸ்தவமானது மற்ற மக்கள் நம்பும்படி செய்ய வேண்டும் என்ற பொறுப்பை ஆதிசபை உணர்ந்திருந்தது. அவர்கள் அவ்விதம் உணர்ந்திருக்கவில்லையென்றால், கிறிஸ்தவமானது அதன் சத்தியத்தை, வல்லமையை, தனித்தன்மையை மற்றும் இசைவான தன்மையை இழந்திருக்கும்.

---

குறிப்புகள்

[1]*The World Almanac and Book of Facts*, 1995 ed., s.v.“Religious Information.” [2]ஜிம் ஜோன்ஸ் தனது சமயச் சட்டம் அல்லது மதத்தின் பெயரினால் மக்கள் குழு ஒன்றைத் தற்கொலை செய்து கொள்ளும்படியாக வழிநடத்தினார்.